## PDDU Quotes



தர்மம் என்பது ஒரு மிகவும் பரந்த கருத்தாகும். இது வாழ்க்கையின் அனைத்து அம்சங்களிலும் அக்கறை கொண்டுள்ளது. இது சமூகத்தை நிலைத்திருக்கச் செய்கிறது. மேலும், இது முழு உலகையும் நிலை நிறுத்துகிறது. இவ்வாறு நிலைத்திருக்கச் செய்வது தான், தர்மம் ஆகும்.
- பண்டிட் தீன்தயாள் உபாத்யாயா
சிந்தனைச் சிதறல்கள்




ஒரு தேசத்தின் மனஉணர்வை (சிட்டி) வெளிப்படுத்தவும் பராமரிக்கவும் உதவும் விதிமுறைகள் தர்மம் என்று அழைக்கப்படுகின்றன. தர்மம் என்பது நாட்டின் ஆன்மாவின் களஞ்சியமாகும்.
- பண்டிட் தீன்தயாள் உபாத்யாயா
சிந்தனைச் சிதறல்கள்




தர்மம் என்பதை 'உள்ளார்ந்த சட்டம்' எனச் சொல்லலாம். இது, மனித நடத்தையைப் பல்வேறு சூழ்நிலைகளில் நிர்ணயிக்கிறது. இருப்பினும், தர்மத்தின் முழு அர்த்தத்தையும் இது வெளிப்படுத்தாது. தர்மம் மிக உயர்ந்தது என்பதால், நமது அரசின் இலட்சியம் - தர்ம ராஜ்யமாகும்.
- பண்டிட் தீன்தயாள் உபாத்யாயா
சிந்தனைச் சிதறல்கள்




தீண்டாமை
சமூகம் தீண்டாமை போன்ற தீமைகளால் பீடிக்கப்பட்டால், தங்களைவிட பிற மனிதர்களைத் தாழ்ந்தவர்களாகக் கருதி, அதன் மூலம் தேசிய ஒற்றுமையை அழிக்கும் அச்சுறுத்தும் மனிதர்களை வழி நடத்த அனுமதித்தால் நாம் அத்தகைய தீமைகளை முடிவுக்குக் கொண்டுவர வேண்டும்.
- பண்டிட் தீன்தயாள் உபாத்யாயா
சிந்தனைச் சிதறல்கள்




மனித குலம் - உடல், மனம், புத்தி மற்றும் ஆன்மா ஆகிய நான்கு நல்லொழுக்கங்களைக் கொண்டிருக்கிறது. அவை தர்மம் (தார்மீக கடமைகள்), அர்த்தம்(செல்வம்), காமம்(ஆசை) மற்றும் மோட்சம்(விடுதலை) ஆகிய நான்கு உலகளாவிய நோக்கங்களை ஒத்திருக்கின்றன. இவை ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன. எதையும் புறக்கணிக்கவியலாது. ஒவ்வொரு மனிதனும் இந்த நான்கு நோக்கங்களை நிறைவேற்ற வேண்டும். ஒருங்கிணைந்த வழியில் இவற்றை நிறைவேற்றுவதே பாரதிய கலாச்சாரத்தின் சாராம்சம். ஆனால், முதலாளித்துவ மற்றும் சோஷலிச சித்தாந்தங்கள் உடல் மற்றும் மனத்தின் தேவைகளான செல்வம் மற்றும் ஆசையை மட்டுமே பொருட்டாக கருதுகின்றன.
- பண்டிட் தீன்தயாள் உபாத்யாயா
சிந்தனைச் சிதறல்கள்




பாரதத்தின் ஆன்மாவை ஒருவர் புரிந்து கொள்ள வேண்டுமென்றால், அவர் இந்த நாட்டை அரசியல் அல்லது பொருளாதார நோக்கில் பார்க்காமல், கலாச்சாரக் கண்ணோட்டத்தில் பார்க்க வேண்டும். பாரத தேசம் தன்னை அரசியல் ரீதியாக அல்லாமல், கலாச்சாரத்தின் மூலமே வெளிக்காண்பிக்கவியலும். உலகிற்கு நாம் கற்பிக்கக்கூடிய எதுவும் நம்மிடம் இருக்குமானால், அது - நமது கலாச்சார சகிப்புத்தன்மை மற்றும் கடமையின் மீதான அர்ப்பணிப்பு வாழ்க்கை ஆகியனவாகும்.
- பண்டிட் தீன்தயாள் உபாத்யாயா
சிந்தனைச் சிதறல்கள்




தர்ம ராஜ்யம் எந்தவொரு தனி மனிதனையோ அமைப்பையோ இறையாண்மையாக அங்கீகரிக்கவில்லை. ஒவ்வொரு நபரும் சில கடமைகளுக்கு உட்பட்டவர்கள். நிர்வாக உரிமைகள், பாராளுமன்றம் / சட்டமன்றம் மற்றும் மக்கள் போன்றோர் தர்மத்தால் நிர்ணயிக்கப்பட்டு கட்டுப்படுத்தப்படுகின்றனர்.
- பண்டிட் தீன்தயாள் உபாத்யாயா
சிந்தனைச் சிதறல்கள்




உலகத்தின் பிரச்சனைகளுக்கான விடை சோசலிசம் அல்ல, அது இந்து மதத்தில் உள்ளது. இது வாழ்க்கையை ஒட்டு மொத்தமாகப் பார்க்கிறது, தனித்தனி பிரிவுகளாக அல்ல. இங்கே நம் வாழ்க்கையின் இந்துக் கொள்கைகளை சில மறைந்து போன சடங்கு முறைகளுடனோ அல்லது இந்து சமுதாயத்தில் நிலவும் பல இந்துக்கள் அல்லாதோரின் பழக்க வழக்கங்களுடனோ தொடர்பு படுத்தக்கூடாது. அதே நேரத்தில் இந்து மதம் நவீன அறிவியல் முன்னேற்றத்திற்கு எதிரானது என்ற கருத்து மிகப் பெரிய தவறாகும். அறிவியல் மற்றும் இயந்திரம் இரண்டையும் நமது சமூக, கலாச்சார வாழ்க்கைக்கு ஏற்ப பயன்படுத்த வேண்டும்.
- பண்டிட் தீன்தயாள் உபாத்யாயா
சிந்தனைச் சிதறல்கள்



சிந்தனைச் சிதறல்கள்

நாம் யாதொரு தொல்பொருள் ஆய்வாளரும் இல்லை. ஒரு பரந்த தொல்பொருள் அருங்காட்சியகத்தின் பாதுகாவலராக ஆவதற்கான எந்த எண்ணமும் இல்லை. நமது குறிக்கோள் - வெறுமனே கலாச்சாரத்தைப் பாதுகாப்பது மட்டுமல்ல, அதைப் புத்துயிர் பெறச் செய்வதும், அதை மாறுகிற காலத்திற்கேற்ப மாற்றுவதாகும்.

- பண்டிட் தீன்தயாள் உபாத்யாயா



சிந்தனைச் சிதறல்கள்

நமது நோக்கம் மனிதனின் முன்னேற்றம் மற்றும் மகிழ்ச்சியாகும். முதலாளித்துவத்தையோ சோசலிசத்தையோ நாம் விரும்பவில்லை. ஒருங்கிணைந்த 'மனிதனின்' முன்னேற்றத்தையும் மகிழ்ச்சியையும் நோக்கமாகக் கொண்டுள்ளோம். முதலாளித்துவ மற்றும் சோசலிச அமைப்புகள் இரண்டும் மனிதனைப் புரிந்து கொள்ளவும் இல்லை, மனிதனின் எண்ணங்களை - ஆசைகளை அவை கண்டுகொள்ளவும் இல்லை.

- பண்டிட் தீன்தயாள் உபாத்யாயா



சிந்தனைச் சிதறல்கள்

சுதேசியின் நேர்மறையான கருத்துக்களை நமது பொருளாதாரப் புனரமைப்புக்கான அடித்தளமாகப் பயன்படுத்தப்பட வேண்டும்.

- பண்டிட் தீன்தயாள் உபாத்யாயா



சிந்தனைச் சிதறல்கள்

சமூகம் என்பது தனி மனிதர்களின் கூட்டமைப்பு மட்டுமல்ல. அது ஓர் உயிருள்ள நிறுவனம். தனது நிலத்தின் மீது நல்ல பக்தியையும், தன்னகத்தே அறிவார்ந்த சிறப்பியல்புகளையும் கொண்ட ஒரு சமூகம் ஒரு தேசத்தை உருவாக்குகிறது.

-பண்டிட் தீன்தயாள் உபாத்யாயா



சிந்தனைச் சிதறல்கள்

பல கலாச்சாரங்களின் முழக்கம் இந்த நாட்டை துண்டு துண்டாக உடைத்து அழிக்க முடியும். எனவே, முஸ்லீம் லீக் மற்றும் காங்கிரசின் இரு கலாச்சாரக் கோட்பாடு, கம்யூனிஸ்டுகளின் பல கலாச்சாரக் கோட்பாடு ஆகியவை தவறானவை. பல கலாச்சாரக் கோட்பாடு மட்டுமே இந்தியக் கலாச்சாரத்தை வகுப்புவாதமாக கண்டனம் செய்துள்ளது. ஒரே கலாச்சார உணர்வு மூலமே இந்தியாவின் ஒற்றுமையையும் ஒருமைப்பாட்டையும் பாதுகாக்க முடியும் மற்றும் நமது அனைத்துப் பிரச்சனைகளையும் தீர்க்க முடியும்.

-பண்டிட் தீன்தயாள் உபாத்யாயா



சிந்தனைச் சிதறல்கள்

உலகத்தின் பிரச்சனைகளுக்கான விடை சோசலிசம் அல்ல, அது இந்து மதத்தில் உள்ளது. இது வாழ்க்கையை ஒட்டு மொத்தமாகப் பார்க்கிறது, தனித்தனி பிரிவுகளாக அல்ல. இங்கே நம் வாழ்க்கையின் இந்துக் கொள்கைகளை சில மறைந்து போன சடங்கு முறைகளுடனோ அல்லது இந்து சமுதாயத்தில் நிலவும் பல இந்துக்கள் அல்லாதோரின் பழக்க வழக்கங்களுடனோ தொடர்பு படுத்தக்கூடாது. அதே நேரத்தில் இந்து மதம் நவீன அறிவியல் முன்னேற்றத்திற்கு எதிரானது என்ற கருத்து மிகப் பெரிய தவறாகும். அறிவியல் மற்றும் இயந்திரம் இரண்டையும் நமது சமூக, கலாச்சார வாழ்க்கைக்கு ஏற்ப பயன்படுத்த வேண்டும்.

- பண்டிட் தீன்தயாள் உபாத்யாயா



சிந்தனைச் சிதறல்கள்

கல்வி - ஒரு சமூகப்பொறுப்பு: ஒரு குழந்தைக்கு கல்வி கற்பிப்பது என்பது சமூகத்தின் நலனுக்காகவே. பிறப்பால் குழந்தை ஒரு விலங்கிற்கு ஒப்பானது. அக்குழந்தை - கல்வி, மற்றும் கலாச்சாரத்தால் மட்டுமே சமூகத்தின் பொறுப்பான உறுப்பினராகிறது. சமூகத்தின் நலனுக்கான ஒரு செயலுக்கு கட்டணம் வசூலிப்பது சரியானதன்று. கட்டணம் செலுத்த இயலாமையால், குழந்தைகளுக்குக் கல்வி கிடைக்காமல் போய் விட்டால், இச்சூழலைச் சமூகம் நீண்ட காலம் தாங்க முடியுமா? விதை விதைப்பதற்கும், மரக்கன்றுகளைப் பராமரிப்பதற்கும் நாம் மரங்களிலிருந்து கட்டணம் ஏதும் வசூலிப்பதில்லை. மாறாக, நாம் நமது பணத்தையும் முயற்சிகளையும் முதலீடு செய்கிறோம். மரம் வளரும்போது பழங்களைப் பலனாகப் பெறுவோம் என்பது நாம் அறிந்ததே! கல்வியும் இது போன்ற ஒரு முதலீடே ஆகும்.

- பண்டிட் தீன்தயாள் உபாத்யாயா



சிந்தனைச் சிதறல்கள்

**காலாவதியான கலாச்சாரம்**

மேற்கத்திய சித்தாந்தங்களை நமது முன்னேற்றத்தின் அடிப்படையாக மாற்ற விரும்புவோர், அந்த சித்தாந்தங்கள் சில தனிப்பட்ட சூழ்நிலைகளிலும் காலங்களிலும் எழுந்துள்ளன என்பதை மறந்து விடுகிறார்கள். அவை உலகளாவியவை அல்ல. அவை ஒரு குறிப்பிட்ட மக்கள் மற்றும் அவர்களது கலாச்சார வரம்பிற்கு உட்பட்டு உருவான சித்தாந்தங்கள் ஆகும். தவிர, இவற்றில் பல ஏற்கனவே காலாவதியானவை.

மார்க்சின் கொள்கைகள் மாறிவரும் காலங்கள் மற்றும் மாறுபட்ட சூழ்நிலைகளுக்கு ஏற்ப மாறிவிட்டன. நமது தேசம் எதிர்கொள்ளும் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்காக மார்க்சிய சித்தாந்தங்களைக் கிளிப்பிள்ளை போல் திரும்பத்திரும்ப பரிசீலிப்பது என்பது அறிவியல் மற்றும் நடைமுறைக்கு பொருந்தாத பிற்போக்குத்தனமான அணுகுமுறையைக் குறிக்கும். கொடிய மரபுகளை அகற்றுவதன் மூலம் சமுதாயத்தைச் சீர்திருத்த எண்ணுபவர்கள், காலாவதியான சில வெளிநாட்டு மரபுகளுக்கு இரையாகிறார்கள் என்பது ஆச்சரியமான உண்மையாகும்.

- பண்டிட் தீன்தயாள் உபாத்யாயா



சிந்தனைச் சிதறல்கள்

தற்போதைய பொருளாதார அமைப்பும் உற்பத்தி முறையும் இயற்கையின் சமநிலையை மிக வேகமாக பாதிப்புக்கு உள்ளாக்குகின்றன. இதன் விளைவாக, ஒருபுறம் அதிகரித்துவரும் விருப்பங்களை நிறைவு செய்வதற்காக, புதிய பொருட்கள் தயாரிக்கப்படுகின்றன. மறுபுறம் ஒவ்வொருநாளும் புதிய சிக்கல்கள் எழுகின்றன. ஆகையால், எளிதில் மீட்டெடுக்கக்கூடிய இயற்கை வளங்களின் பகுதியை மட்டுமே பயன்படுத்துவது அவசியமாகும். எனவே, இயற்கையை அழிக்காமல் பயன்படுத்துவதே நமது பொருளாதார அமைப்பின் நோக்கமாக இருக்க வேண்டும்

- பண்டிட் தீன்தயாள் உபாத்யாயா



சிந்தனைச் சிதறல்கள்

தர்மத்தின் அடிப்படைக் கொள்கைகள் நித்தியமானவை மற்றும் உலகளாவியவை. இருப்பினும், காலம், இடம் மற்றும் சூழலுக்கு ஏற்ப அவற்றின் செயல்பாடுகள் வேறுபடலாம். மாறும் காலத்திற்கும் இடத்திற்கும் ஏற்றதாக தர்மத்தின் கொள்கைகளும் இருக்க வேண்டும். தர்மத்தின் கொள்கையின்படி, மனித இயல்புகளை வழிநடத்துவதன் மூலம் நாம் உயர்வான கலாச்சாரத்தையும் நாகரீகத்தையும் கொண்டிருக்கிறோம்.

- பண்டிட் தீன்தயாள் உபாத்யாயா



சிந்தனைச் சிதறல்கள்

**[illegible]**

வேதகால மதம், எப்போதும் மாறிக் கொண்டேயிருக்கிறது. இந்த மதம் மாறும், மேலும் வாழ்ந்து கொண்டிருக்கும். இது ஒரு தேங்கி நிற்கிற குளம் போன்றதல்ல. புதிய சிந்தனைகள் எப்போதுமே இந்த மதத்திற்குள் நுழைந்தன. பழைய சிந்தனைகள் மாற்றத்தின் மூலம் உருவாகியுள்ளன. ஆனால் ஒவ்வொரு புதிய மாற்றமும் பழையவற்றுடன் அதன் தொடர்பைத் தக்க வைத்துக் கொண்டுள்ளன. ஒவ்வொரு புதிய புரட்சியாளரும் தனது முதாதையர்களுக்கு மரியாதை செலுத்தும் உணர்வைப் பெறுகிறார்கள். ஒவ்வொரு புதிய சீர்திருத்தவாதியும் தனது பண்டைய பாரம்பரியம், நம் முதாதையர்கள் மற்றும் அவர்களின் சாதனைகளுக்கு மதிப்பளித்தனர். அதே நேரத்தில் காலத்திற்கேற்ப புதிய சிந்தனைகளை முன்வைத்தனர். இப்புதிய சிந்தனைகள் அடிப்படைச் சிந்தனையுடன் முரண்பட்டு போனாலும், அவை எந்த வகையிலும் தேசத்தின் வாழ்க்கைக்குத் தீங்கு விளைவிக்கவில்லை. மாறாக, அவை அதன் வளர்ச்சிக்குப் பங்களித்தன.

**- பண்டிட் தீன்தயாள் உபாத்யாயா**



சிந்தனைச் சிதறல்கள்

தேசத்தை நிலைநிறுத்தும் அந்த அரசியலமைப்பு தர்மத்துடன் இணைந்திருக்கிறது. தர்மம் தேசத்தை நிலை நிறுத்துகிறது. தர்மம் இறையாண்மையாகக் கருதப்படுவதால், நாம் எப்போதும் தர்மத்திற்கு முதன்மையான முக்கியத்துவத்தை அளிக்கிறோம். அனைத்து மனிதர்கள், நிறுவனங்கள் அல்லது அதிகார அமைப்புகள் தர்மத்திலிருந்து தங்கள் அதிகாரத்தை /சக்தியைப் பெறுகிறார்கள். அதற்கு அடிபணிந்து நடக்கிறார்கள்.

**- பண்டிட் தீன்தயாள் உபாத்யாயா**



சிந்தனைச் சிதறல்கள்

அனைவருக்கும் வாக்குரிமை என்பது அரசியல் ஜனநாயகத்தின் உரை கல் என்றால் அனைவருக்கும் வேலை என்பது பொருளாதார ஜனநாயகத்தின் ஒரு அளவீடாகும். வேலை செய்வதற்கான இந்த உரிமை என்பது கம்யூனிச நாடுகளைப் போல அடிமை உழைப்பைக் குறிக்காது. வேலை என்பது ஒரு மனிதனின் வாழ்வாதாரத்திற்கான வழிமுறையாக மட்டும் இருக்கக் கூடாது. ஆனால் அந்த வேலை அம்மனிதனின் விருப்பத் தேர்வாக இருக்க வேண்டும். அந்த வேலையைச் செய்ததற்காக தொழிலாளிக்கு தேசிய வருமானத்திலிருந்து சரியான பங்கு கிடைக்கவில்லை என்றால், அவர் வேலையற்றவராகவே கருதப்படுவார். இந்தக் கண்ணோட்டத்தில்-குறைந்தபட்ச ஊதியம், நியாயமான விநியோக முறை மற்றும் ஒருவித சமூகப் பாதுகாப்பு ஆகியவை அவசியமானதாகும்.

**- பண்டிட் தீன்தயாள் உபாத்யாயா**



சிந்தனைச் சிதறல்கள்

தர்மம் என்பது கோயில்கள், மசூதிகள் என்ற எல்லைகளுக்கு உட்பட்டதல்ல. கடவுளை வணங்குவது தர்மத்தின் ஒரு பகுதி மட்டுமே. தர்மம் மிகவும் விரிவானது. கடந்த காலங்களில், கோயில்களின் தர்மப்படி, மக்களுக்கு கல்வி கற்பதற்கான ஒரு சிறந்த ஊடகமாக கோயில்கள் செயல்பட்டன. இருப்பினும், பள்ளிகள் அறிவை உண்டாக்கவில்லை என்பதுபோல, கோயில்களும் தர்மத்தை உருவாக்குவதில்லை. ஒரு குழந்தை தவறாமல் பள்ளிக்குச் செல்லக் கூடும். இருப்பினும், அக்குழந்தை இன்னும் படிக்காதவராக இருக்கலாம். அதுபோலவே, ஒருவர் கோயிலுக்கோ மசூதிக்கோ இடைவிடாது செல்பவராக இருந்தாலும், அவர் தர்மத்தை அறியாதவராக இருக்கலாம். கோயில் அல்லது மசூதிக்குச் செல்வது மதம், மத உட்பிரிவு, மதநம்பிக்கைத் தொகுப்பின் ஒரு பகுதியாக இருக்கும். ஆனால் தர்மமாக இருக்கவேண்டிய அவசியமில்லை. பல தவறான கருத்துக்கள் ஆசிரியரின் ஆங்கில மொழிபெயர்ப்புகளிலிருந்து தோன்றியுள்ளன. அவற்றில் மிகவும் மோசமான விஷயம், மதத்தையும் தர்மத்தையும் ஒன்றாகக் கொள்வதாகும்.

**- பண்டிட் தீன்தயாள் உபாத்யாயா**



சிந்தனைச் சிதறல்கள்

**தர்மராஜ்யம்**

ஒவ்வொரு மதத்திற்கும் சுதந்திரம் உள்ளது. ஆனால் இந்தச் சுதந்திரம் மற்றவர்களின் மதத்தின் மீது அத்துமீறாத வரையில் மட்டுமே நீண்டுள்ளது. இத்தகைய அத்துமீறல் நடந்தால், சுதந்திரம் தவறாகப் பயன்படுத்தப்படுவதாகக் கூறி தண்டிக்கப்பட வேண்டும். மேலும், அது முடிவுக்கு வரவேண்டும். அத்தகைய வரையறைகள் வாழ்க்கையின் அனைத்து நிலைகளிலும் தேவைப்படுகிறது. இவ்வாறு மதச் சுதந்திரத்தை உறுதி செய்வது தர்ம ராஜ்ஜியம் ஆகும்.

**- பண்டிட் தீன்தயாள் உபாத்யாயா**



சிந்தனைச் சிதறல்கள்

அனைவருக்கும் உணவும் வேலையும்

"ஒவ்வொரு தொழிலாளியும் உணவைப் பெற வேண்டும்" என்ற வழக்கமான முழக்கத்திற்குப் பதிலாக நமது பொருளாதாரத்தின் அடிப்படையாக, "அனைவருக்கும் உணவும் வேலையும் கிடைக்க வேண்டும்" என்பதை நாம் சிந்திக்க வேண்டும். 'கை இரட்டைக்குப் பதிலாக' இயந்திரங்கள் வர வேண்டும் என்பதில் ஐயமில்லை. ஆனால், எல்லா இடங்களிலும் தானியங்கி இயந்திரங்களாக இருக்க வேண்டுமென்ற அவசியமில்லை. அனைவருக்கும் வாய்ப்பு என்பது முதன்மைக் கருத்தாக இருக்க வேண்டும்.

**- பண்டிட் தீன்தயாள் உபாத்யாயா**



சிந்தனைச் சிதறல்கள்

மனிதவளப் பற்றாக்குறையின் காரணமாக, அதற்கேற்ப இயந்திரங்களை வடிவமைத்த மேற்கத்திய நாடுகளிலிருந்து இயந்திரங்களை இறக்குமதி செய்வது மிகப்பெரிய தவறாகும். இயந்திரங்களின் சிறப்பு என்பது தயாரிக்கப்பட்ட காலம் மற்றும் இடத்தைப் பொறுத்தது. இயந்திரங்கள் நவீன அறிவியலின் கண்டுபிடிப்பே தவிர, அதன் பிரதிநிதிகள் அல்ல. அறிவியல் அறிவு எந்தவொரு நாட்டின் ஏகபோகமும் அல்ல. ஆனால், அதன் பயன்பாடு ஒவ்வொரு நாட்டின் குறிப்பிட்ட நிலை மற்றும் அதன் தேவைகளைப் பொறுத்தது என்பதைக் கணக்கில் கொள்ள வேண்டும். நமது இயந்திரங்கள் நமது குறிப்பிட்ட பொருளாதாரத் தேவைகளுக்கு ஏற்ப வடிவமைக்கப்பட வேண்டும். மேலும் குறைந்தபட்சம், நமது சமூக-அரசியல் மற்றும் கலாச்சாரத்திற்கு ஏற்றதாக இருக்க வேண்டும்.

- பண்டிட் தீன்தயாள் உபாத்யாயா



சிந்தனைச் சிதறல்கள்

**சுதந்திரமும் கலாச்சாரமும்**

சுதந்திரம் என்பது ஒருவரின் சொந்த கலாச்சாரத்துடன் நெருக்கமான தொடர்புடையது. கலாச்சாரம் சுதந்திரத்தின் அடிப்படையை உருவாக்கவில்லையென்றால், சுதந்திரத்திற்கான அரசியல் இயக்கம் என்பது சுயநல மற்றும் அதிகாரவர்க்கத்தின் போராட்டமாகச் சுருங்கிப்போகும்.

**- பண்டிட் தீன்தயாள் உபாத்யாயா**



சிந்தனைச் சிதறல்கள்

**தேசிய அடையாளம்**

நமது தேசிய அடையாளம் பற்றி நாம் சிந்திக்க வேண்டியது அவசியம். இந்த அடையாளம் இல்லாமல் 'சுதந்திரத்திற்கு' எந்த அர்த்தமும் இல்லை. நமது தேசிய அடையாளத்தை நாம் அறியாதவரை, நம்முடைய எல்லா திறன்களையும் வளர்த்துக் கொள்ளவியலாது. "மேலும் பாரதம் எதிர் கொள்ளும் பிரச்சனைகளுக்கு அடிப்படைக் காரணம் அதன் தேசிய அடையாளத்தைப் புறக்கணிப்பதே ஆகும்.

**- பண்டிட் தீன்தயாள் உபாத்யாயா**



சிந்தனைச் சிதறல்கள்

**வாழ்வின் ஒற்றுமைகள்**

மேற்கத்திய நாடுகளில் உள்ள குழப்பம் வாழ்க்கையைப் பல பிரிவுகளாகப் பிரித்துப் பார்க்கின்ற போக்கிலிருந்து முதலாவதாகக் குழப்பம் எழுகின்றது. பின்னர் அவற்றை ஒட்டு வேலை மூலம் ஒன்றாக இணைத்துப் பார்க்க முயற்சிக்கின்றன. வாழ்க்கையில் பன்முகத்தன்மையும் (Diversity) மற்றும் பன்மையும் (Plurality) இருப்பதை நாம் ஒப்புக் கொள்கிறோம். ஆனாலும் அவற்றிற்கு பின்னால் உள்ள ஒற்றுமையைக் கண்டறியவும் நாம் எப்போதும் முயற்சி செய்கின்றோம். இந்த முயற்சி முற்றிலும் அறிவியல் பூர்வமானது.

**- பண்டிட் தீன்தயாள் உபாத்யாயா**



தீன்தயாள் ஜி யின் சிந்தனைச் சிதறல்கள்

**கொள்கை மற்றும் தாய்நாடு உணர்வு**

ஒரே குழுவினராக, ஒரே இலக்கு, ஒரே கொள்கை மற்றும் சேவை மனப்பான்மையுடன் வாழ்ந்து ஒரு குறிப்பிட்ட நிலத்தைத் தனது தாய் நாடாகக் கருதும்போது அது தேசமாகிறது. கொள்கை மற்றும் தாய்நாடு ஆகிய இரண்டில் ஏதேனும் ஓர் உணர்வு இல்லையென்றாலும் பின்னர் எந்த தேசமும் இல்லை.

**- பண்டிட் தீன்தயாள் உபாத்யாயா**



தீன்தயாள் ஜி யின் சிந்தனைச் சிதறல்கள்

**வெளிநாட்டு உதவியைக் கட்டுப்படுத்துதல்**

பொருளாதாரத் துறையிலும் நாம் தன்னிறைவு உடையவர்களாக இருக்க வேண்டும் என்பது முக்கியமாகும். நமது திட்டங்களின் நிறைவேற்றம் வெளிநாட்டு உதவியைப் பொறுத்தது என்றால், அது நிச்சயமாக நம்மீது நேரடியானதோ அல்லது மறைமுகமானதோ ஒரு கட்டுப்பாட்டை உருவாக்கும். உதவி வழங்கும் நாடுகளின் பொருளாதார ஆதிக்கம் நிறைந்த துறையாக நாம் இருக்கப்போகிறோம். நமது பொருளாதாரத் திட்டங்களை பிரச்சனைகளிலிருந்து காப்பாற்றுவதற்காக நாம் பல நேரங்களில் அவைகளுக்காக இருக்க வேண்டியிருக்கும். பிறரைச் சார்ந்து இருக்கின்ற ஒரு நாடு அதன் சுய மரியாதையை இழக்கிறது. அத்தகைய நாடு, அதன் சுதந்திரத்தின் மதிப்பை ஒருபோதும் உணராது. எந்தவொரு நாடும் தனது தேவைக்கேற்ப தங்கு உதவுகின்றமை என்பதும் உறுதி.

அந்த நாடுகள் நமது திட்டங்களை ஆராயும். பின்னர், நமது நலனுக்கு உகந்ததாக இல்லாவிட்டாலும் கூட, வெளிநாட்டு உதவிகளுக்கு ஏற்ற திட்டங்களையே நாம் உருவாக்க வேண்டும்.

**- பண்டிட் தீன்தயாள் உபாத்யாயா**



தீன்தயாள் ஜி யின் சிந்தனைச் சிதறல்கள்

**தேசத்தின் செழிப்பும் தர்மமும்**

பொருள் வளம் இல்லையென்றாலும் சரி, பொருள் வளம் அதிகமாக இருந்தாலும் சரி, தர்மத்தின் அழிவிற்கு அது வழிவகுக்கிறது. இது நமது தேசத்தின் தனிக் கண்ணோட்டமாகும். மேற்கத்திய நாடுகள் பொருள் கிடைக்கின்ற வழிமுறைகளைப் பற்றி எப்போதும் சிந்திப்பதில்லை. இந்த வழிமுறைகள், அவற்றின் மூலம் பெறுகின்ற பொருட்கள் மற்றும் இன்பங்களுக்கு அவர்களை அடிமை கொள்ளுமானால், அந்தப் பொருள் நல்ல தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது என்று நாம் கூறலாம். பொருள் சார்ந்த செல்வம் இல்லாத போது, விரும்பியது நடக்காமல் போய்விடுகிறது. அதிகமாக இருக்கும்போது, அது தேவையான நடத்தைக்கு மாறாக சிந்திப்பதற்கான வழிமுறையாக மாறுகிறது. மாறாக இந்த இன்பங்களுக்கு ஆனால் ஒரு மனிதன் செல்வத்தின் தேவையை எப்போதும் உணருவார். அதே நேரத்தில், இன்பங்களுக்கு அவர் அடிமையாவது செல்வத்தைச் சம்பாதிப்பதற்கான அவரது திறனைக் குறைக்கும்.

**- பண்டிட் தீன்தயாள் உபாத்யாயா**



தீன்தயாள் ஜி யின் சிந்தனைச் சிதறல்கள்

**இலவச மருத்துவ சிகிச்சை**

ஒருவர் தனது மருத்துவ சிகிச்சைக்காகப் பணம் செலுத்த வேண்டியுள்ளது ஆச்சரியமாக இருக்கிறது. உண்மையில், நமது நாட்டில் மருத்துவ சிகிச்சை கடந்த காலத்தில் இருந்ததைப் போலவே இலவசமாக வழங்க வேண்டும். இப்பொழுதெல்லாம், ஒரு கோவிலுக்குள் செல்வதற்கு நுழைவுக் கட்டணம் செலுத்த வேண்டும். திருப்பதியில் உள்ள பாலாஜி கோவிலுக்குள் நுழைவதற்கு 25 பைசா கட்டணம் வசூலிக்கப்படுகிறது. இருப்பினும், நண்பகலில் ஒரு மணிநேரத்திற்கு தர்ம தரிசனம் உள்ளது. இந்த நேரத்தில் கட்டணம் செலுத்தத் தேவையில்லை. மற்ற நேரங்களில் கட்டணம் செலுத்தப்படும்போது, அது அதர்ம தரிசனமாகிறது. சமூகம், அதன் அனைத்து உறுப்பினர்களின், பராமரிப்பு மற்றும் முன்னேற்றத்திற்கான குறைந்த பட்சத் தேவைகளுக்கு உத்திரவாதம் அளிக்க வேண்டும்.

**- பண்டிட் தீன்தயாள் உபாத்யாயா**